குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வானூர்

முன்னிலை:- திருமதி.N.பீரித்தி, B.A.,B.L.

குற்றவியல் நீதித்துறை நடுவர், வானூர்.

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ம் நாள் புதன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 78/2023

C.N.R.No.TNVP 12000209-2023

அரசுக்காக.
காவல் உதவி ஆய்வாளர்,
கிளியனூர் காவல் நிலையம்,
குற்ற எண்.102/2022 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

| | |
|---|---|
| எதிரி.1 | சகாதேவன் (30/2022) த/பெ.ராஜகோபால் |
| எதிரி.2 | மாயகிருஷ்ணன்(42/2022) த/பெ.எல்லப்பன் |
| எதிரி.3 | சரவணன் (21/2022) த/பெ.குப்பன் |
| எதிரி.4 | சக்தி (எ) (சக்திமுருகன்) (22/2022) த/பெ.அருணாசலம் |
| எதிரி.5 | புகழ் (எ) புகழேந்தி(25/2022) த/பெ.துரைரங்கன் |
| எதிரி.6 | ஆனந்தன்(எ) கிருஷ்ணமூர்த்தி(32/2022) த/பெ.ராஜகோபால் (எதிரிகள் அனைவரும் அருவாப்பாக்கம் கிராமம், வானூர் வட்டம்) |

...... எதிரிகள்

CASE SUMMARY

| S.No. | Particulars | Report |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | A1to A6 Anticipatory Bail on 26-05-2022 and A1 to A5 Surrendered on 31-05-2022 A6 – Surrendered on 22-08-2025 |
| 2. | The date of filing of the complaint/final report in the Court | Date of filing final report on 01-09-2022 Taken Cognizance on 21-04-2023 |
| 3. | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4. | The date of 1st questioning of the accused under Sections 228, | Accused questioned on 04-09-2025 |

| | | |
|---|---|---|
| | 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challange before superior courts: except routine petitions like petitions under section 317 of the Code: | Nil |
| 6. | Date of examination in – Chief and cross – Examination of a Witness | P.W.1 Chief and cross examined on 26-03-2026<br>P.W.2 Chief and cross examined on 26-03-2026<br>P.W.3 Chief and cross examined on 26-03-2026<br>P.W.4 Chief and cross examined on 26-03-2026<br>P.W.5 Chief and cross examined on 26-03-2026<br>P.W.6 Chief and cross examined on 26-03-2026 |
| 7. | Date of examination of the accused U/Sec.313 of the Code | 02-04-2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be ; and NBW pending/recalled | Nil |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கு 21/04/2023 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து குற்றம் முறையிடுவோர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் திரு.ராஜசேகர் நிலை 1 அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.K.அய்யனார், திரு.K.ஜெயக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இன்று இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்

இவ்வழக்கின் சாட்சி-2 ராஜதுரை என்பவருக்கும் 1வது எதிரிக்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் 01-05-2022ம் தேதி இரவு 09:30 மணியளவில் அருவாப்பாக்கம் மாரியம்மன் கோயில் எதிரில் சாட்சி-2 தன் நண்பர்களுடன் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த 1வது எதிரி டேய் தேவிடியாப்பையா இங்க என்னடா பூலா என அசிங்கமாக திட்டி சட்டையைப் பிடித்து அடித்தும், இதைப்பார்த்து மறிக்க வந்த 3 முதல் 5 சாட்சிகளை 2 முதல் 6 எதிரிகள் தகவல் அறிந்து தடியுடன் வந்து அசிங்கமாக திட்டி கையாலும், தடியாலும் அடித்து இனிமேல் இங்கு இருந்தால் வெட்டி கொலை செய்துவிடுவதாக கொலைமிரட்டல் விடுத்ததாக 1 முதல் 6 எதிரிகள் மீது கிளியனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(2) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நகல்களும் குவிமுச 207 பிரிவின் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றத்தினை மறுத்தனர். எனவே இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டு, இவ்வழக்கின் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், எதிரிகள் மீது பிரிவுகள் 148, 294(பி), 324, 506(2) இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோதும், எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம்

தெரிவித்தனர். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அதில் கூடுதல் சாட்சியுடன் அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. பட்டியல் சாட்சிகளில் மோகன், சுரேன், மருத்துவர் சுதாகர், உதவி ஆய்வாளர் வேலுமணி ஆகியோர் அரசு தரப்பில் விசாரிக்காமல் விலக்கி கொள்ளப்பட்டார்கள். அரசு தரப்பில் சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>

இவ்வழக்கின் சாட்சி-2 ராஜதுரை என்பவருக்கும் 1வது எதிரிக்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் 01-05-2022ம் தேதி இரவு 09:30 மணியளவில் அருவாப்பாக்கம் மாரியம்மன் கோயில் எதிரில் சாட்சி-2 தன் நண்பர்களுடன் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த 1வது எதிரி டேய் தேவிடியாப்பையா இங்க என்னடா பூலா என அசிங்கமாக திட்டி சட்டையைப் பிடித்து அடித்தும், இதைப்பார்த்து மறிக்க வந்த 3 முதல் 5 சாட்சிகளை 2 முதல் 6 எதிரிகள் தகவல் அறிந்து தடியுடன் வந்து அசிங்கமாக திட்டி கையாலும், தடியாலும் அடித்து இனிமேல் இங்கு இருந்தால் வெட்டி கொலை செய்துவிடுவதாக கொலைமிரட்டல் விடுத்துள்ளனர்.

6) அதை தொடர்ந்து 02/05/2022ம் தேதி 13:00 மணியளவில் திரு.குமார் த/பெ.குப்புசாமி, அருவாப்பாக்கம் கிராமம், வானூர் வட்டம் என்பவர் கிளியனூர் காவல் நிலையத்தில் அவரது கையொப்பமிட்டு அ.சா.ஆ.1 கொடுத்த புகாரை அ.சா.ஆ.2 நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு.வேலமணி பெற்று நிலையக் குற்ற எண்.102/2022ல் எதிரிகள் மீது இதச

பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(2) இதவின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்தார். பின்னர் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன் மற்றும் சுரேன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 தயார் செய்தார். சாட்சிகள் குமார், ராஜதுரை, ராஜவேல், இளங்கோ, வேல்முருகன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயம்பட்ட இளங்கோ மற்றும் வேல்முருகன் என்பவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுதாகர் என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து இளங்கோ மற்றும் வேல்முருகன் என்பவர்களின் காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ-7ஐ பெற்றார். இவ்வழக்கில் 1 முதல் 6 எதிரிகள் மேன்மைமிகு விழுப்பரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றுள்ளனர். இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து இறுதியாக எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(2) இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

7) இவ்வழக்கில் புகார்தாரர் திரு.குமார் அ.சா.1 ஆகவும், திரு.ராஜதுரை அ.சா.2 ஆகவும், திரு.ராஜவேலு அ.சா.3 ஆகவும், திரு. இளங்கோவன் அ.சா.4 ஆகவும், திரு.வேல்முருகன் அ.சா.5 ஆகவும், கூடுதல் சாட்சி திரு.பிரசாந்த் தலைமை காவலர் அ.சா.6 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

8) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோதும் எதிரிகள் அரசு தரப்பு சாட்சி கூறுவதை மறுத்து, தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்றும் கூறினார்கள். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

09) இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

10) இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதேயாகும்?

11) அ.சா.1 முதல் அ.சா.6டன் எதிரிகள் இந்த வழக்கு பிரச்சனையை நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் செய்து கொண்டதாக BNSS பிரிவு 359(2)-ன் கீழ் இந்நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளார். எதிரிகள் மீதான சட்டப்பிரிவு 294(பி), 506(2) இதசவின் கீழான குற்றம் சமாதானமாக போக முடியாத குற்றம் என்பதால் இந்நீதிமன்றம் மேற்படி மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

12) இவ்வழக்கில் புகார்தாரர் திரு.குமார் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் "சுமார் 3 வருடங்களுக்கு முன்பு இரவு 10:00 மணிக்கு என் மகன்கள் ராஜதுரை மற்றும் ராஜவேலு ஆகியோர்களை யாரோ தாக்கியதாக கேள்விப்பட்டேன். என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. என்னை யார் எதற்காக தாக்கினார்கள் என்று தெரியாது. கும்பலாக இருந்த நபர்கள் யார் என்று தெரியாது. என் மகன்களை யார் எதற்காக தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக எங்கள் தெருவிற்கு வந்த கிளியனூர் காவல் நிலைய போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது" என்று அரசு தரப்பிற்கு பிறழ்ந்து சாட்சியமளித்துள்ளார்.

13) இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களாக அரசு தரப்பில் சொல்லப்படும் இளங்கோவன் மற்றும் வேல்முருகன் என்பவர்கள் முறையே

அ.சா.4 மற்றும் அ.சா.5ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக எதுவும் தங்களுக்கு தெரியாது என்று அரசு தரப்பிற்கு பிறழ்ந்தே சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கு கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் சொல்லப்படும் திரு.ராஜதுரை மற்றும் ராஜவேலு என்பவர்கள் முறையே அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களும் நீதிமன்ற சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்பிற்கு பிறழ்ந்தே சாட்சியமளித்துள்ளார்கள்.

14) மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததில் இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1, வழக்கு சம்பவத்தில் காயம் பட்ட நபர்களான அ.சா.4 மற்றும் அ.சா.5 மற்றும் வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.2 மற்றும் அ.சா.3 இவ்வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்காமல், பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியங்கள் அளித்துள்ள நிலையில், அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்ட திரு.பிரசாந்த், தலைமை காவலர் என்பவரின் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு, எதிரிகள் மீதான குற்றங்கள் மெய்பிக்கப்பட்டதாக கருத இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) புகார்தாரர் அ.சா.1, வழக்கு சம்பவத்தில் காயம் பட்ட நபர்களான அ.சா.4 மற்றும் அ.சா.5 மற்றும் வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.2 மற்றும் அ.சா.3 இவ்வழக்கு சம்பவம் பற்றியோ, புகாரில் உள்ள சங்கதிகள் பற்றியோ சாட்சியம் அளிக்காத நிலையிலும், எதிரிகளுக்கு எதிராக எந்த ஒரு சாட்சியமும் அளிக்காத நிலையிலும், பிறழ் சாட்சிகள் அளித்துள்ள மேற்படி சாட்சிகளை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதிலும், அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே சாட்சிகள் அளித்துள்ள நிலையிலும், அவரது சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்றும், எனவே அ.சா.6 அரசு தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ள போதிலும், இவரது

சாட்சியத்தை மட்டுமே வைத்து இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

16) எனவே 1 முதல் 6 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>முடிவாக</u>

17) மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, இவ்வழக்கில் 1 முதல் 6 எதிரிகள் மீது பிரிவுகள் 148, 294(பி), 324, 506(2) இதசவின் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம் திரிபற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, 1 முதல் 6 எதிரிகளை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18) இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதும் கைப்பற்றப்படவில்லை என்பதால் சொத்து குறித்து உத்தரவு இல்லை.

19) எதிரிகள் ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில், மேல்முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லை எனில் மேல் முறையிட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளின்

பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

N PREETHI
Digitally signed by N PREETHI
Date: 2026.04.16 10:49:35 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.

<u>பின் இணைப்பு -</u>

<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.குமார் |
| அ.சா.2 | திரு.ராஜதுரை |
| அ.சா.3 | திரு.ராஜவேலு |
| அ.சா.4 | திரு.இளங்கோவன் |
| அ.சா.5 | திரு.வேல்முருகன் |
| அ.சா.6 | திரு.பிரசாந்த், தலைமை காவலர் |

<u>அரசுத்தரப்பு சான்றாவணம்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02/05/2022 | புகாரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 02/05/2022 | புகார் |
| அ.சா.ஆ.3 | 02/05/2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 02/05/2022 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 02/05/2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 01/05/2022 | அ.சா.4ன் காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | 01/05/2022 | அ.சா.5ன் காயச்சான்று |

<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u> - இல்லை.

<u>எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள்</u> - இல்லை.

N PREETHI
Digitally signed by N PREETHI
Date: 2026.04.16 10:49:46 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.